இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 31-08-2025

# மெத்தனம் உருவாக்கிய அபாயம்!

தமிழ்நாடு முதலமைச்சரின் வேண்டுகோள், தமிழ்நாட்டுக்கானது மட்டுமல்ல; இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் நன்மைக்காகவும்தான்!

**“அமெரிக்காவின் 50 விழுக்காடு வரிவிதிப்பு தமிழ்நாட்டின், குறிப்பாகப் பின்னலாடை மையமான திருப்பூரின் ஏற்றுமதி வர்த்தகத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. ஆண்டுக்கு 3000 கோடி ரூபாய் வர்த்தகம் பாதிப்பதோடு, பல்லாயிரக்கணக்கானோரின் வேலைவாய்ப்பும் இதனால் பாதிப்படைந்துள்ளது. இந்நிலையில், ஒன்றிய அரசிடம் முன்வைத்த கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்துகிறேன். உடனடி நிவாரணம் மற்றும் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மூலம் நமது தொழிற்சாலைகள் மற்றும் பணியாளர்களைக் காக்க வேண்டுகிறேன்” என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்கள்.**

அமெரிக்க அதிபராக டிரம்ப் மீண்டும் வந்த பிறகு அவர் செய்யும் பல செயல்கள் அந்த நாட்டை மட்டுமல்ல; மற்ற நாடுகளையும் அதிகம் பாதித்து வருகிறது. குறிப்பாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு முதலில் 25 விழுக்காடு வரியை அதிகப்படுத்தினார். நேற்றைய தினம் கூடுதலாக 25 விழுக்காடு வரியை அதிகரித்துள்ளார். இதன்காரணமாக, அமெரிக்காவுவில் இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி இனி செலுத்த வேண்டும்.

இந்தியாவைப் பற்றிய மோசமான பிம்பத்தை உருவாக்குவதில் டிரம்ப் கவனம் செலுத்தினார். “அமெரிக்கா மீது வரிகளையும் பிற தடைகளையும் விதித்துள்ள ‘மோசமான நாடுகளில்’ ஒன்று” என்று இந்தியாவைப் பட்டியலிட்டார் டிரம்ப். இதன் காரணமாக இந்தியா மீது 27 விழுக்காடு வரி விதிக்கப்படும் என்று அறிவித்தார். அதுவரை 2 விழுக்காடு வரி மட்டுமே விதிக்கப்பட்டு வந்த நிலையில், “இந்தியா மீது 27 விழுக்காடு வரி போடப்படும்” என்று சொன்னார்.

**வர்த்தகக் கொள்கைகளைப் பொறுத்தவரை, ‘இந்தியா மிகவும் கடினமாக நடந்துகொள்கிறது’ என்றும் டிரம்ப் தெரிவித்தார். இந்தியச் சந்தையில் அமெரிக்க இறக்குமதிகள் போட்டியிடுவதை இந்தியாவின் வர்த்தகக் கொள்கைகள் மிகவும் கடினமாக்குகிறது என்று குறிப்பிட்ட அவர், “இந்தியா மிக மிக கடுமையாக நடந்து கொள்கிறது. பிரதமர் மோடி சமீபத்தில் இங்கு வந்து சென்றிருந்தார். அவர் எனக்கு சிறந்த நண்பர். நான் அவரிடம் , ‘நீங்கள் என் நண்பர்தான். ஆனால், நீங்கள் எங்களை சரியாக நடத்தவில்லை’ என்று சொன்னேன். அவர்கள் 52 விழுக்காடு இறக்குமதி வரி விதிக்கிறார்கள். நாம் பல ஆண்டுகளாக அவர்களுக்கு இறக்குமதி வரி விதிக்கவில்லை” என்று அப்போது டிரம்ப் சொன்னார். இப்படிப் பேசியதன் மோசமான விளைவுகளைத் தான் இனி பார்க்கப் போகிறோம்.**

இவ்வளவு சொல்லிய டிரம்ப்புக்கு தொடக்கத்தில் சரியான எதிர்வினையை மோடியின் பா.ஜ.க. அரசாங்கம் செய்யவில்லை. பேச்சுவார்த்தைகள் நடத்தியது பா.ஜ.க. அரசு. அந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து வரும் நிலையில்தான் 50 விழுக்காடு வரியை உறுதி செய்து விட்டார் டிரம்ப்.

**இந்தியாவைப் பற்றி டிரம்ப் கவலைப்பட மாட்டார். ஆனால் மோடி கவலைப்படவேண்டாமா? அவர்மெத்தனமாகஇருந்துகொண்டதுதான் இன்று அபாயம் ஆகிவிட்டது.**

**இந்த வரிவிதிப்பின்மூலமாக இந்திய ஏற்றுமதியின் முதுகெலும்பை முறிக்கும் செயலை டிரம்ப் செய்துள்ளார். இந்திய நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 18 விழுக்காடு அமெரிக்காவுக்குச் செல்கிறது. இது முழுக்க முழுக்க முடங்கி விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 8 லட்சம் கோடி மதிப்பிலான பொருட்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது இந்தியா. இவை மொத்தமாகப் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சந்தையை மற்ற நாடுகள் பயன்படுத்திக் கொள்ளும்.**

ஜவுளிகள், துணிகள், ஆயத்த ஆடைகள், மீன், இறால், ரத்தினம், தங்க நகைகள், தோல்கள், காலணிகள், எஃகுப் பொருட்கள், அலுமினியம், இயந்திரங்கள், இயந்திரப் பொருட்கள் ஆகியவை இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு அதிகமாக ஏற்றுமதி ஆகிறது. இதன் உற்பத்தியானது இந்தியாவில் இனி பாதிக்கப்படும்.

அமெரிக்க வரி விதிப்பால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கும். 6.5 விழுக்காடு வளர்ச்சி என்று பா.ஜ.க. அரசு சொல்லி வருகிறது. அதில் பாதிப்பு ஏற்படும். 5.6 விழுக்காடாகக் குறையலாம் என்றும் சொல்லப்படுகிறது.

இதில் தமிழ்நாட்டின் நிலைமையும் நெருக்கடிக்கு உள்ளாகும். தமிழ்நாடு மின்னணு உற்பத்தியில் முன்னணி மாநிலமாக இருக்கிறது. இந்தியாவின் மின்னணு உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தி ஆகிறது. செல்போன்களுக்கான உதிரி பாகங்கள் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி ஆகின்றன. தமிழ்நாட்டில் இருந்து இறால் ஏற்றுமதி ஆகிறது. கோவையில் இருந்து ஆண்டுக்கு 4000 கோடி ரூபாய் மதிப்பிலான இயந்திர உதிரிபாகங்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆகின்றன. திருப்பூரில் ஆண்டுக்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஜவுளிப் பொருட்கள் உற்பத்தி ஆகின்றன என்றால் அதில் 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஜவுளிப் பொருட்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆவதாக புள்ளி விவரங்கள் சொல்கின்றன. டிரம்பின் இந்த வரி விதிப்பால் ஏற்கனவே தயார் நிலையில் உள்ள பொருட்கள் தேக்கம் அடையும். புதிய உற்பத்தியும் குறையும். தொழிற்சாலைகளை மூட வேண்டியதாக இருக்கும். பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலை இழக்கும் சூழல் ஏற்படும்.

**இவைபற்றி எல்லாம் பா.ஜ.க. அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஏற்றுமதியில் சிறந்த தமிழ்நாட்டின் மேற்கு மண்டலமானது பெரிய பாதிப்புக்கு உள்ளாகும். இதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.**

தனது நண்பருக்காக நாட்டின் வளர்ச்சியைக் காவு கொடுக்கப் போகிறாரா மோடி?





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.8.2025) நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடல்நலம் குறித்து விசாரித்தபோது, அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்வதையொட்டி முதலமைச்சர் அவர்களுக்கு, பயணம் வெற்றி பெற தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

# தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஓங்கி குரல் கொடுப்பவர் என்.ஆர்.இளங்கோ!

## மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை… முதல் பக்கத் தொடர்ச்சி

அவருடைய கொள்கைப் பிடிப்புமிக்க வாழ்வையும் - வழக்கறிஞர் தொழிலில் சிறப்பாகப் பணியாற்றுவதையும் பார்த்துதான், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1996-லும், 2006-லும் கழக ஆட்சி அமைந்தபோது, அவருக்கு அரசு வழக்கறிஞராகப் பணியாற்றும் வாய்ப்பை வழங்கினார்கள்.

அவருடைய வழக்கறிஞர் பணியைப் பாராட்டி நான் மட்டுமல்ல. இங்கிருக்கக்கூடிய நாம் மட்டுமல்ல, பல்வேறு நீதிபதிகளும் அவரை மனம்திறந்து பாராட்டி இருக்கிறார்கள். மூத்த வழக்கறிஞர்களும் அவருடைய திறமையை வியந்து பாராட்டி இருக்கிறார்கள். நீதியை நிலைநாட்டும் அவருடைய திறமையை, கழகம் இன்னும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்துதான் அவருக்கு நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக அனுப்பி வைத்தோம். அவரும் தமிழ்நாட்டின் உரிமைக்காக அந்த அவைக்குச் சென்று ஓங்கி குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

இதைவிட, முக்கியமான ஒரு பணியை அவருக்கு நாம் கொடுத்திருக்கிறோம். அதைத்தான் தம்பி உதயநிதி அவர்களும் சொன்னார். மற்றவர்களும் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

### கழகத்தின் வார் ரூமிற்குப் பொறுப்பேற்று இளங்கோ ஆற்றிடும் அளப்பரிய பணிகள்!

நம்முடைய என்.ஆர். இளங்கோ அவர்கள் தான் இன்சார்ஜ். என்ன இன்சார்ஜ் என்றால் அது தான், ‘வார் ரூம்’ பணி! தேர்தல் நேரத்தில் வழக்கறிஞர்கள் அணியைத் தயாராக வைத்திருப்பார். அதோடு, வாக்குச்சாவடி முகவர்களுக்கு முறையாக அமைத்து அவர்களுக்குப் பயிற்சியும் வழங்கிக் கொண்டிருக்கிறார். தேர்தல் களத்தில் முன்கள வீரர்களாகச் செயலாற்ற கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு நாடு என்ன மாதிரியான பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் SIR என்ற சிறப்பு வாக்காளர் திருத்தம் - என்ன மாதிரியான பிரச்சினைகளை எல்லாம் ஏற்படுத்தி இருக்கிறது என்பதற்கு நான் இங்கு அதிகம் விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதற்காகத்தான், நம்முடைய அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் ஒரு நடைபயணத்தை மேற்கொண்டிருக்கிறார். மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய சூழல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

### தலைமைக் கழகம் சார்பில் என்.ஆர்.இளங்கோவை மனதாரப் பாராட்டுகிறேன்!

இரண்டு நாட்களுக்கு முன்பு, நானும் பீகார் சென்று, வாக்காளர் உரிமைப் பயணம் என்று சகோதரர் ராகுல் காந்தி நடத்தி வரும் அந்த விழிப்புணர்வுப் பயணத்தில் பங்கேற்றேன் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

இந்த நிலை தமிழ்நாட்டில் ஏற்படக் கூடாது என்பதற்காக, இப்போதே நம்முடைய விழிப்புணர்வைப்பெற்று நாம் அதற்குத் தயாராக வேண்டும் என்பதற்காகத்தான் அதைத் தடுத்து நிறுத்துவதற்கான அத்தனை முயற்சிகளிலும் ஈடுபட்டிருப்பவர்தான் நம்முடைய என்.ஆர். இளங்கோ அவர்கள். அதற்காக இந்த நேரத்தில் நான் தலைமைக் கழகத்தின் சார்பில் அவரை மனதாரப் பாராட்ட, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய உரிமை சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தி, அதில் நீதியரசர்களைப் பங்கேற்க வைத்து பல ஆன்றோர்கள், சான்றோர்களையெல்லாம் அதில் பங்கேற்க வைத்து அதையும் நடத்திக் கொண்டு இருக்கிறார்.

### சுயமரியாதை உணர்வோடு நடைபெறும் திருமணம் இது!

நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதில் நம்முடைய என்.ஆர். இளங்கோ அவர்கள் எவ்வளவு உறுதியுடன் இருக்கிறார் என்று, நான் சொல்ல வேண்டும் என்றால், இங்கு மணமக்களுக்கு மாலைகளை மாற்றுவதற்கும், மாங்கல்யத்தை எடுத்துக்கொடுக்கக்கூடிய தாம்பாளத் தட்டில் அவர் என்ன வைத்திருந்தார் என்றால்,

**நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதில் நம்முடைய என்.ஆர். இளங்கோ அவர்கள் எவ்வளவு உறுதியுடன் இருக்கிறார் என்று, நான் சொல்ல வேண்டும் என்றால், இங்கு மணமக்களுக்கு மாலைகளை மாற்றுவதற்கும், மாங்கல்யத்தை எடுத்துக்கொடுக்கக்கூடிய தாம்பாளத்தட்டில் அவர் என்ன வைத்திருந்தார் என்றால், தலைவர் கலைஞர் எழுதிய திருக்குறள் உரை, அரசியலமைப்புச் சட்டம் - அதை வைத்துதான் அந்த மாங்கல்யத்தையும், மாலையையும் வைத்து தட்டைக் காண்பித்தார். அதைத்தான் எடுத்துவந்து கொடுத்தேன்.**



தலைவர் கலைஞர் எழுதிய திருக்குறள் உரை, அரசியலமைப்புச் சட்டம் - அதை வைத்துதான் அந்த மாங்கல்யத்தையும், மாலையையும் வைத்து தட்டைக் காண்பித்தார். அதைத்தான் எடுத்துவந்து கொடுத்தேன்.

இப்படிப்பட்ட என்.ஆர்.இளங்கோ இல்லத் திருமணத்தில் - அதுவும் சுயமரியாதை உணர்வோடு நடைபெறும் இந்தத் திருமணத்தில், நானும் உங்களோடு சேர்ந்து கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன்.

நாளையதினம் நான் ஜெர்மனி - இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஒரு வார கால பயணம் மேற்கொள்ள இருக்கிறேன். நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டிற்கு இதுவரை சுமார் 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான தொழில்களை நாம் ஈர்த்திருக்கிறோம்.

இதற்கான என்னுடைய வெளிநாட்டுப் பயணங்களின் போது, முதலீட்டாளர்களும் தொழில் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய மனப்பூர்வமாக ஆர்வம் காட்டுவதை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

### தந்தை பெரியாரின் மண்டைச் சுரப்பை உலகு தொழும்!

இப்போது இந்தப் பயணத்தில் என்ன திட்டமிட்டிருக்கிறோம் என்றால், அதைப்பற்றி நாளைய தினம் நான் விமானத்தில் ஏறிப் புறப்படுவதற்கு முன்பு நிச்சயமாக பத்திரிகையாளர்களைச் சந்தித்து அந்த விவரங்களையெல்லாம் சொல்லப்போகிறேன். ஆனால் அதற்கு முன்பு நடைபெறக்கூடிய இந்தத் திருமண விழாவில், ஒரு முக்கியமான நிகழ்வை அறிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்ச்சமூகம் சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து நடைபோடுவதற்குக் காரணம், தந்தை பெரியார் அவர்கள்! அதனால்தான், தந்தை பெரியாரைப் பற்றி எழுதிய பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் சொன்னார்கள்,

**“தொண்டு செய்து பழுத்த பழம்**
**தூய தாடி மார்பில் விழும்**
**மண்டைச் சுரப்பை உலகு தொழும்**
**மனக்குகையில் சிறுத்தை எழும்!”**

என்று எழுதினார்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சிந்தனையை உலகு தொழும் காட்சியை நாம் இந்தப் பயணத்தில் பார்க்கப்போகிறோம்.

### தந்தை பெரியாரின் சிந்தனைகள் அனைவருக்கும் பொதுவானவை!

உலகின் மிகப்பெரிய அறிஞர்களைத் தந்த, புகழ்மிக்க அறிவுசார் நிறுவனமாகப் போற்றப்படும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில், அறிவாசான் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படம் திறக்கப்பட இருக்கிறது! அதை என்னுடைய திருக்கரங்களால் திறந்துவைக்க இருக்கிறேன் என்று எண்ணிப்பார்க்கும்போது நான் இப்போதே மகிழ்ச்சிக் கடலில் மிதந்துகொண்டு இருக்கிறேன்.

தந்தை பெரியார் தமிழ்நாட்டில் பிறந்து, தமிழில் பேசி - எழுதியிருந்தாலும், அவருடைய சிந்தனைகள் இந்த உலகத்திற்கானது; அனைவருக்கும் பொதுவானது!

அவர் வலியுறுத்திய, சுயமரியாதை - பகுத்தறிவு - பெண் விடுதலை - ஏற்றத்தாழ்வு மறுப்பு - தன்னம்பிக்கை - அனைவரும் சமம் ஆகிய கருத்துகளுக்கு எல்லைகள் கிடையாது. இவைகளை உலக மக்கள் அனைவரும் பொதுவான வகையில் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட அறிவுமேதை உலக அளவில் அடையாளம் காணப்பட்டு, அங்கீகரிக்கப்படுவது நம்முடைய தமிழ்நாட்டிற்குப் பெருமை!

அதற்கு முன்பு, நம்முடைய என்.ஆர். இளங்கோ இல்லத் திருமணத்தை நடத்தி வைத்து விட்டுதான் அந்தப் பயணத்தை நான் மேற்கொள்ள இருக்கிறேன் என்பதையும் இங்கு நான் சுட்டிக்காட்டி,

### வீட்டிற்கு விளக்குகளாய், நாட்டிற்குத் தொண்டர்களாய் வாழ்ந்திடுக!

இந்த நேரத்தில் நான் மணமக்களை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகள் - அது ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்… சூட்டுங்கள்… என்று என்னுடைய அன்பான வேண்டுகோளை வைத்து, புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியதுபோல, “வீட்டிற்கு விளக்குகளாய், நாட்டிற்குத் தொண்டர்களாய்” மணமக்கள் வாழுங்கள்… வாழுங்கள்… வாழுங்கள்… என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (29.8.2025) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தென்னிந்தியாவின் உள்கட்டமைப்புகட்டுமான இயந்திர வர்த்தகக் கண்காட்சியினைத் துவக்கி வைத்துப் பார்வையிட்டார். உடன் மாநாட்டுக் குழுவினர், தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்ததாரர்கள், கூட்டமைப்பு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.